பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | தை 07 | திங்கட்கிழமை | 20.01.2025 | அதிர்வு 171

## மீன் தொட்டியில் வீழ்ந்து ஆண் குழந்தை மரணம்!

வீட்டில் உள்ள மீன் தொட்டியில் வீழ்ந்து ஒன்றரை வயது குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

வாதுவ, தல்பிட்டிய பகுதியைச் சேர்ந்த ஆண் குழந்தையே இவ்வாறு 05

# வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் சாவு

## முழுமையான உடற்கூற்றுப் பரிசோதனைக்கு நீதிவான் உத்தரவு




(எஸ்.ரகுதீஸ்)

யாழ். வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்த குடும்பஸ்தரின் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்து முழுமையான உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறை பதில் நீதிவான் திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் உத்தரவிட்டார். 05



## தேசிய மக்கள் சக்தி அரசின்

# புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு எதிராகப் போராடத் தயாராகும் விமல்

"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு தேசியத்துக்கு முன்னுரிமை வழங்கிச் செயற்படாது. மதக் கொள்கையற்ற வகையில் புதிய அரசமைப்பை உருவாக்கும் நிலைப்பாட்டில் இந்த அரசு உள்ளது. எனவே, தேசியத்தைப் பாதுகாப்பதற்காகச் செயற்பாட்டு ரீதியிலான அரசியலில் ஈடுபட நாம் ஈடுபடவுள்ளோம்."-

இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார். 05

# யாழ். குருநகரில் மினி சூறாவளி!

## 49 வீடுகள் சேதம்; 222 பேர் பாதிப்பு







(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், குருநகர் பகுதியில் நேற்று வீசிய மினி சூறாவளி காரணமாக 49 வீடுகள் சேதமடைந்துள்ளன என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு 05




வடக்கு – கிழக்கில் விழுந்து கிடக்கும் தமிழ்த் தேசியத்திற்கும், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் முகம் கொடுத்தது கிழக்கு மாகாணம்தான்.

வடக்கு – கிழக்கில் தமிழரசின் எட்டு எம்பிக்களில் ஆறு எம்.பிக்களை வழங்கிய தனித்துவம் கிழக்கு மாகாணத்துக்குரியது.

அதிலும் மட்டக்களப்பு மாவட்டம் தனித்து சிறப்புற்று நிற்கிறது. அங்கு தமிழ் மக்கள் ஒன்றுபட்டு நின்று அளித்த 65,000 வாக்குகளுக்கு மேற்பட்ட ஒற்றுமைப் பலமே தமிழ்த் தேசியம் இறந்துவிடவில்லை என்ற உயிர் மூச்சை நமக்குத் தந்துள்ளது என்று கூறுவது மிகையல்ல.

யார் ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அந்த வெற்றியின் பிரதான சூத்திரதாரி சாணக்கியன் எம்.பிதான்.

தமிழரசுக் கட்சிக்குள் கிழக்கு மாகாணத்திலிருந்து அடுத்த தலைமைத்துவத்திற்கு உயரும் தனித்துவமும், துணிவும், தகைமையும், அரசியல் சீற்றமும், மிக இளம் வயதிலேயே மும்மொழி ஆற்றலும் மிக்கவராக அவரே விளங்குகிறார். 05

# வட மத்திய மாகாண பாடசாலைகளுக்கும் இன்று பூட்டு!




வட மத்திய மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் இன்று திங்கட்கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

நிலவும் மோசமான காலநிலையைக் கருத்தில்கொண்டு பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படுகின்றது என்று வடமத்திய மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.டபிள்யூ. சமரகோன் தெரிவித்தார்.

இதேவேளை, சீரற்ற காலநிலையால் கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் இன்று விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# மழையுடனான வானிலையால் வெள்ளள அபாய எச்சரிக்கை



வடக்கு, வட மத்திய, ஊவா, மத்திய மாகாணங்களில் நிலவும் மழையுடனான வானிலை எதிர்வரும் 24 மணித்தியாலங்களுக்கு தொடர்ந்து நீடிக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேற்படி பகுதிகளில் 100 மில்லி மீற்றர் வரையான பலத்த மழை பெய்யுமென திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இடைக்கிடையே இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு மலைச்சரிவுகளிலும் வடக்கு, வட மத்திய, கிழக்கு, கிழக்கு, வட மேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை, மொனராகலை மாவட்டங்களிலும் காற்றின் வேகம் மணிக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, பலத்த மழையுடனான வானிலையால் மல்வத்து ஓயாவின் தாழ்நிலப் பகுதிகளான வெங்கலச் செட்டிக்குளம், மடு, முசலி, நானாட்டான் பிரதேச செயலக பிரிவுகளுக்கு வெளள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் கூறியுள்ளது.

வெள்ள நிலைமை தொடர்பில் நீர்ப்பாசனத் திணைக்களம் வெளியிட்டுள்ள சிவப்பு எச்சரிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாச்சாதுவ நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையால் செக்கனுக்கு 3,700 கன அடி நீர் மல்வத்து ஓயா நீர்த்தேக்கத்திற்கு விடுவிக்கப்படுவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கல் ஓயாவின் நீர்மட்டம் அதிகரித்துள்ளமையால் அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, அம்பாறை, தமன, எராகம, மடுல்ல, நிந்தவூர், சம்மாந்துறை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மேற்படி ஆற்றை அண்மித்து தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானமாக செயற்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# 4 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை



நாட்டில் நிலவும் பலத்த மழையுடன் கூடிய வானிலையால் 4 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தால் பதுளை, கண்டி, குருணாகல், மாத்தளை மாவட்டங்களின் சில பிரதேச செயலகப் பிரிவுகளுக்கே மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தின் உடுதும்பர பிரதேச செயலகப் பிரிவுக்கும் மாத்தளை மாவட்டத்தின் யட்டவத்த, உக்குவெல, இரத்தோட்டை, வில்கமுவ பிரதேச செயலக பிரிவுகளுக்கும் 2ஆம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நெல்லுக்கு நிர்ணய விலையை கோருகின்றனர் விவசாயிகள்



நெல்லுக்கான நிர்ணய விலையை அரசாங்கம் இன்னும் அறிவிக்காததால் தாம் பல பிரச்சினைகளை எதிர்கொள்வதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

பெரும் போகத்தில் ஒரு கிலோ கிராம் நெல்லுக்கு குறைந்தபட்சம் 140 ரூபா நிர்ணய விலை அறிவிக்கப்பட வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்துகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தின் ஹ^லன்னுகே, லாஹ^கல மற்றும் செங்கமுவ பகுதிகளில் நெல் அறுவடை பணிகளைத் தொடங்கியுள்ளதாகவும், மேலும் உற்பத்தி செலவுகள் கணிசமாக அதிகரித்துள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

# சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு




நாட்டுக்கு வருகைதரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, கடந்த இரண்டு வாரங்களில் மாத்திரம் 112, 415 பேர் நாட்டுக்கு வந்துள்ளனர்.

அதன்படி, இதுவரையான காலப்பகுதியில், இந்தியாவிலிருந்து 19,353 பேரும், ரஷ்யாவில் இருந்து 17,225 பேரும், பிரித்தானியாவில் இருந்து 9,178 பேரும் நாட்டுக்கு வந்துள்ளனர்.

# மழையுடனான வானிலையால் ஐந்து மாவட்ட மக்கள் பாதிப்பு



பலத்த மழையுடனான வானிலை காரணமாக நாட்டின் 5 மாவட்டங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி, நுவரெலியா, காலி, அனுராதபுரம் மற்றும் குருணாகல் ஆகிய 5 மாவட்டங்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன.

மேற்படி மாவட்டங்களில் 325 குடும்பங்களைச் சேர்ந்த 910 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அனர்த்தங்களால் 9 குடும்பங்களைச் சேர்ந்த 46 பேர் தொடர்ந்தும் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, பலத்த மழையுடனான வானிலையால் முந்தெனி ஆறு, மல்வத்து ஓயா மற்றும் மகாவலி கங்கை ஆகியவற்றின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது.

முந்தெனி ஆற்றின் நீரேந்துப் பகுதிகளான அம்பாறை மாவட்டத்தின் மஹாஓயா மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்பற்று மற்றும் கோரளைப்பற்று பிரதேச செயலக பிரிவுகளுக்கு சிறியளவிலான வெள்ள அபாயம் காணப்படுவதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

மல்வத்து ஓயாவின் தாழ்நிலப் பகுதிகளான வெங்கலச்செட்டிக்குளம், மடு, முசலி, நானாட்டான் பிரதேச செயலக பிரிவுகளுக்கும் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மகாவலி கங்கையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளயால் திம்புலாகல, ஈச்சிலம்பற்று, கிண்ணியா, கந்தளாய், கோறளைப்பற்று வடக்கு, மூதூர், சேருவில, ஹிங்குராங்கொடை, லங்காபுர, மெதிரிகிரிய, தமன்கடுவ ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு எதிர்வரும் 48 மணித்தியாலங்களுக்கு வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் இருநாட்களாக பெய்து வரும் மழை காரணமாக சேனநாயக்க சமுத்திரத்தின் நீர்மட்டம் 106 அடியாக உயர்ந்துள்ளது.

கடந்த 24 மணித்தியாலங்களில் நாட்டில் அதிகளவிலான மழைவீழ்ச்சி திருகோணமலையில் பதிவாகியுள்ளது.

திருகோணமலையில் 178 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

# அன்று சீனாவை விமர்சித்தவர் இன்று ஒப்பந்தமிட்டது எப்படி?

## அநுரவின் சீனப் பயணத்தை போட்டுத் தாக்குகிறார் நாமல்



அம்பாந்தோட்டை துறைமுகத்தை அன்று புனரமைத்த போது சீனாவுக்கு எதிராகக் கடும் விமர்சனங்களை முன்வைத்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இன்று அதே துறைமுகத்துக்காகச் சீனாவிடமிருந்து பெரும் முதலீட்டைப் பெற்றுள்ளார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“அம்பாந்தோட்டை துறைமுகத்தை நாம் நிர்மாணித்த போது, இன்றைய ஜனாதிபதி அநுர அன்று கடும் விமர்சனங்களை முன்வைத்தார். சீனாவின் கொலணியாக இலங்கையை மாற்றுவதற்கு நாங்கள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம் என்றும் விமர்சித்தார். ஆனால், இன்று அதே துறைமுகத்துக்காகச் சீனாவிடம் இருந்து மிகப்பெரியதொரு முதலீட்டை அவர் கொண்டுவந்துள்ளார். இது மகிழ்ச்சியளிக்கின்றது.

நாட்டுக்கு வெளிநாட்டு முதலீடுகள் வருவதை நாம் வரவேற்கின்றோம். அநுர அரசு ஆட்சிக்கு வந்து 100 நாள்கள் கடந்துவிட்டன. ஆனால், அபிவிருத்தித் திட்டங்கள் இன்னும் ஆரம்பமாகவில்லை.” - என்றார்.

# நெடுங்கேணியில் கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் சிக்கினார்!

நெடுங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் கஞ்சா வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நெடுங்கேணி பொலிஸ் அதிகாரிகள் குழுவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே மேற்படி நபர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் பெரிய குளம் பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞராவார். கைதான நபரிடமிருந்து 2 கிலோ 140 கிராம் கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நெடுங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சிக்குள் அவரது தனித்துவ உயர்வு பலருக்கு எரிச்சலை தந்திருப்பது என்பது வெளிப்படையானது.

நாடாளுமன்றத்தையே அதிர வைக்கும் விதத்தில் மூன்று மொழிகளிலும் அவர் ஆற்றும் உரைகள், குறுக்கீடுகள், எழுப்பும் கேள்விகள் வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தில் மட்டுமல்லாமல் தென்னிலங்கையிலும் பரபரப்பை பெற்றவை. அதற்கு ஆப்படித்துப் பின் தள்ளும் வேலை ஒன்று சத்தம் சந்தடியின்றி நகர்த்தப்படுவது குறித்து கிழக்கிலிருந்து மூத்த தமிழரசுப் பிரமுகர் ஒருவர் எச்சரிக்கை தந்திருக்கிறார்.

இந்த நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சிக்கு அடுத்த பெரிய எதிர்க்கட்சியான இலங்கை தமிழரசுக் கட்சிக்கு அதனால் எதிர்த் தரப்பில் முன் வரிசையில் இரண்டு ஆசனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அவற்றில் ஒன்று தமிழரசு நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரனுக்குரியது. அடுத்தது - நாடாளுமன்ற விவகார குழுவில் தமிழரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சாணக்கியனுக்குரியது.

முதல் வரிசையில் இருந்த படி சாணக்கியன் அடிக்கடி எழுப்பும் அதிர்வுகளைப் பக்கத்தில் இருக்கும் மற்றவர்களால் எழுப்ப முடிவதில்லை. அதன் காரணமாகவோ என்னவோ அல்லது கிழக்கிலிருந்து கட்சியின் அடுத்த தலைமை அவருக்கு போய்விடுமோ என்ற காழ்ப்புணர்வினாலோ அவரை நாடாளுமன்ற முன்வரிசையில் இருந்து பின்னால் தள்ளும் வேலை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இப்போதைய நாடாளுமன்றத்தில் இருக்கும் தமிழரசுக் கட்சியினரில், முந்தைய மூன்று நாடாளுமன்றங்களில் இருந்தவர் என்ற முறையில் சிறிதரன் தான் சிரேஷ்ட நிலையில் உள்ளார்.

இதற்கு முன்னர் ஒவ்வொரு தடவை நாடாளுமன்றத்தில் சிறிநேசன், கோடீஸ்வரன், சாணக்கியன் ஆகியோர் இருந்திருக்கிறார்கள்.

ஆயினும் சாணக்கியன் நாடாளுமன்றுக்கு வர முன்னரான நாடாளுமன்றத்தில் ஒரு தடவை சிறிநேசனும் கோடீஸ்வரனும் இருந்திருக்கின்றமையால் அவர்களே நாடாளுமன்றத்தில் சாணக்கியனை விட சீனியர்கள் என்று குறிப்பிட்டு, அவர்களில் ஒருவருக்கு இந்த முன் வரிசை ஆசனம் வழங்கப்பட வேண்டும் என்று சத்தம் சந்தடி இல்லாமல் ஒரு கடிதத்தை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரன் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு அனுப்பி உள்ளார் என்று, அந்தக் கிழக்கு மாகாண மூத்த தமிழரசு உறுப்பினர் விசனத்துடன் தகவல் தெரிவித்திருக்கிறார்.

அவர் தந்த தகவலை விசாரித்தவரை உண்மை என்று அறிய முடிந்தது.

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழு தலைவர் சிறிதரன் என்ற உறுதிப்பாட்டை தமக்குத் தந்த தமிழரசுக் கட்சியின் செயலாளர்தான் இத்தகைய மாற்றங்கள் எதனையும் செய்வதாயின் அதை எழுத்தில் உறுதிப்படுத்தித் தரவேண்டும் என்று நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் சிறிதரனுக்குப் பதில் அனுப்பி இருக்கின்றார் என்றும் ஒரு தகவல் தெரிய வந்தது.

இது விடயத்தில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவுக்கே தெரியாமல் சிறிதரன் நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்துக்குக் கடிதம் அனுப்பி இருக்கின்றார் என்றும் அந்த மூத்த உறுப்பினர் குறிப்பிட்டார்.

தமிழரசுக் கட்சியின் அடுத்த மத்திய குழு கூட்டம் இனி மார்ச் எட்டாம் திகதி என்று முடிவாகி இருப்பதாக தெரிகிறது. அந்தக் கூட்டத்தில் இந்த விவகாரமும் அனல் பறக்கும் என எதிர்பார்க்கலாம்...!

---

## வல்வெட்டித்துறைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பருத்தித்துறை நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் தப்பியோடி ஒழிந்திருந்த வல்வெட்டித்துறை, தீருவில் பகுதியைச் சேர்ந்த சந்திரகுமார் சந்திரபாலன் (வயது- 45) என்ற குடும்பஸ்தர் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

அவருடைய மனைவி ஆட்டிறைச்சியுடன் உணவு வழங்கினார் என்றும், பின்னர் அவருக்கு நெஞ்சுக்குத்து ஏற்பட்டதைத் தொடர்ந்து ஊரணி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது அவர் உயிரிழந்தார் என்றும் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. எனினும், மரணத்தில் சந்தேகம் உள்ளது என்றும், பொலிஸாரின் மோசமான தாக்குதலால் பாதிக்கப்பட்டு குடும்பஸ்தர் உயிரிழந்திருக்கலாம் என்றும் குடும்பத்தினரால் கூறப்பட்டது.

இந்நிலையில், சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அங்கு சென்ற பருத்தித்துறை பதில் நீதிவான் திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்து முழுமையான உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

உயிரிழந்த நபர், அவருக்கு எதிரான வழக்கு ஒன்றில் அண்மையில் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்த அழைத்து வந்திருந்த நிலையில் நீதிமன்ற வாயிலில் வைத்து தப்பியோடியிருந்தார். இதையடுத்து பருத்தித்துறை நீதிமன்றத்தால் அவருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் மீண்டும் நேற்றுமுன்தினம் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்த நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## மீன் தொட்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தாயும், தந்தையும் வீட்டில் இருந்த போது, குழந்தை வீட்டின் முன் வெளியே மீன் தொட்டிக்கு அருகில் விளையாடிக் கொண்டிருந்தது என்றும், சிறிது நேரத்துக்குப் பிறகு, குழந்தையைக் காணவில்லை எனத் தேடுதல் நடத்தப்பட்டபோது குழந்தை வீட்டில் உள்ள மீன் தொட்டியில் வீழ்ந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டது என்றும் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த குழந்தையின் சடலம் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் வாதுவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

## யாழ்.குருநகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் ஜே/68 கிராம சேவகர் பிரிவில் 48 வீடுகளும், ஜே/69 கிராம சேவகர் பிரிவில் ஒரு வீடும் என 49 வீடுகள் சேதமடைந்துள்ளன.

இவ்வாறு சேதமடைந்த 49 வீடுகளில் வசித்த 49 குடும்பங்களைச் சேர்ந்த 222 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

---

## புதிய அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசிய சுதந்திர முன்னணியின் புதிய தலைமைக் காரியாலயம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பத்தரமுல்லை பகுதியில் பௌத்த மத வழிபாடுகளுடன் திறந்து வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாடு பொருளாதாரம் மற்றும் சமூகக் கட்டமைப்பில் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. அத்துடன் அரசின் ஒருசில செயற்பாடுகளால் நாட்டின் சுயாதீனம் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. நாட்டின் தேசியம் தொடர்பில் அரசு கவனத்தில் கொள்ளவில்லை.

06

# புதிய அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசியத்துக்கு முன்னுரிமை வழங்கி இந்த அரசு செயற்படாது. புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்து தற்போது பேசப்படுகின்றது.

இலங்கையைச் மதச் சார்பற்ற நாடாக மாற்றியமைக்கும் வகையில் புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தவர்கள் இந்த அரசில் முன்னிலை பதவிகளில் உள்ளார்கள். அரசும் அந்த நிலைப்பாட்டில் தான் உள்ளது.

புதிய மாற்றத்துக்காக மக்கள் புதியவர்களைத் தெரிவு செய்தார்கள். புதியவர்கள் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றி எவ்விடத்திலும் பேசுவதில்லை. ஆகவே, புதியவர்களைத் தெரிவு செய்ததன் பிரதி பலனை மக்கள் தற்போது பெற்றுக்கொண்டுள்ளார்கள்.

அதிகாரத்தில் இருக்கும் போதும், இல்லாத போதும் மக்களின் பிரச்சினைகளுக்காகவும், உரிமைகளுக்காகவும் நாங்கள் குரல் கொடுப்போம். தேசியத்தைப் பாதுகாத்தால் மாத்திரமே இலங்கை என்ற அடிப்படையில் முன்னேற்றமடைய முடியும்.

தேசியத்தைப் பாதுகாப்பதற்காகச் செயற்பாட்டு ரீதியிலான அரசியலில் நாம் ஈடுபடவுள்ளோம். கடந்த காலங்களைக் காட்டிலும் இனி உத்வேகத்துடன் செயற்படுவோம்.

தேசிய மக்கள் சக்தி தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு முரணாகத் தற்போது செயற்படுகின்றது. ஆகவே, இந்த அரசுக்குக் கடந்த காலத்தை நினைவுபடுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது.” – என்றார்.
















# காரைநகரில் பயிற்சி பட்டறை

“காரைநகர் பயிற்சி பட்டறை – 2025“ எனும் தொனிப்பொருளில் பிரித்தானிய காரைநகர் நலன்புரிச்சங்கத்தின் அனுசரணையுடன் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் பல்வேறு நிகழ்வுகள் காரைநகர் சலெஞ்ஞர்ஸ் மைதானத்தில் நேற்று இடம்பெற்றன.

காரைநகரில் வாழும் மக்கள் மீளக் காரைநகருக்குத் திரும்ப வேண்டும் என்ற பிரதான கருதுகோளை அடிப்படையாகக் கொண்டு ஊரின் கலை மற்றும் பாரம்பரியம், விவசாய வளர்ச்சி, நீர் மேலாண்மை, பொருளாதார முன்னேற்றம், தொழில்நுட்பம் தொடர்பான பல விடயங்கள் நேற்றைய நிகழ்வில் காட்சிபடுத்தபட்டு அவை தொடர்பாக விளக்கமளிக்கபட்டன.

இதேவேளை தமிழர் பாரம்பரிய நிகழ்வுகளை முன்னிலைபடுத்தும் நோக்கில் ஒடியல் கூழ் மற்றும் சிறுதானிய உணவுகள் மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. அதேபோன்று இந்நிகழ்வில் கடல் உணவுகள், பதநீர் மற்றும் பிற பாரம்பரிய உணவுப் பொருள்களை மக்கள் சுவைத்து மகிழ்ந்தனர்.

நிகழ்வின் இறுதியில் காரைநகர் பட்டறை நிகழ்வை முன்னிட்டு நடத்தப்பட்ட நீச்சல் போட்டி கட்டுமரம், கபடி, கிளித்தட்டு மற்றும் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளிலும் சதுரங்க போட்டி, கட்டுரை போட்டிகளிலும் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.





# வவுனியாவில் போலி ஆவணம் மூலம் அரச காணியை விற்பனை செய்த மோசடி தொடர்பில் ஒருவர் கைது!

(வவுனியா நிருபர்)

அரச காணி ஒன்றைப் போலி ஆவணம் தயாரித்து 22 மில்லியன் ரூபாவுக்கு விற்னை செய்த குற்றச்சாட்டில் வவுனியா மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் குற்றப் புலனாய்வுப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, பம்பைமடு பகுதியில் உள்ள அரச காணி ஒன்றே போலி ஆவணங்கள் மூலம் 22 மில்லியன் ரூபாவுக்குக் கடந்த சில வருடங்களுக்கு



முன்னர் விற்பனை செய்யப்பட்டிருக்கின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைய விசாரணைகள் இடம்பெற்றிருந்தன. இந் நிலையில் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என வவுனியா மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின் அந்த உத்தியோகத்தரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# புதையல் தோண்டிய ஐவர் பொகவந்தலாவவில் கைது

பொகவந்தலாவ பகுதியில் புதையல் தோண்டியவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று பொகவந்தலாவ பொலிஸ் பிரிவில் உள்ள பிரிட்வெல்வத்த பகுதியில் இடம்பெற்றுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குக் கிடைக்கபெற்ற இரகசிய தகவல்களை தொடர்ந்து கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இந்தச் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்ய பட்டவர்கள் சுமார் 40 முதல் 48 வயதுக்கு உட்பட்டவர்கள்.

இவர்கள் அனைவரும் பொகவந்தலாவ பிரதேசத்தை சேர்ந்தவர்கள். அவர்களிடம் இருந்த புதையல் தோண்டப் பயன்படுத்திய உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சீனாவை நாடும் கொழும்பு

கடந்த வாரம் சீனாவுக்கு மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்ட இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் அந்தப் பயண முடிவில் கொழும்பில் வெளியாகும் செய்திகள் மலைக்க வைப்பனவாக இருக்கின்றன.

இலங்கை ஜனாதிபதியின் அரச விஜயத்தின் விளைவாக சீன நிறுவனங்களிடமிருந்து 10 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீடுகளை ஈர்க்கும் வாய்ப்பை இலங்கை பெற்றுள்ளதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று அதன் இணையத்தில் செய்தி வெளியிட்டிருக்கின்றது.

10 பில்லியன் அமெரிக்க டொலர் என்பது இலங்கைப் பணத்தில் சுமார் மூன்று லட்சம் கோடி ரூபா ஆகும்.

அத்துணைத் தொகையில் வெளிநாட்டு முதலீடு இலங்கைக்கு வருவது என்பது இலங்கையின் பொருளாதரத்தில் பெரும் மாற்றத்தை - மேம்பாட்டை - கொண்டு வரத் தக்கது.

வெறும் பரபரப்புச் செய்தியாக அல்லாமல் உண்மையிலேயே அப்படி நடக்குமானால் அது இலங்கையின் பொருளாதார மீட்சி விவகாரத்தில் பேரெழுச்சியாக அமைவது நிச்சயம்.

தவிரவும், அம்பாந்தோட்டையில் 2 லட்சம் பீப்பாய்கள் கொள்ளளவு கொண்ட அதிநவீன எண்ணை சுத்திகரிப்பு ஆலை அமைப்பதற்காக 3.7 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு செய்வதற்கான ஒப்பந்தத்தில் சீனாவின் சீனோபக் நிறுவனம் இலங்கையுடன் கையெழுத்திட்டுள்ளது. இந்தத் திட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்படுமானால் அது இலங்கைக்கான வெளிநாட்டு நாணயக் கையிருப்பை அதிகரிக்கச் செய்யும். இந்த முதலீட்டுச் செயற்றிட்டத்தின் மூலம் இலங்கை ஏற்றுமதி வருமானத்தை ஈட்ட, அந்நிய செலாவணி வருமதி உயரும்.

மேலும் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு, முதலீடு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு பணிக்குழுவை நிறுவுதல், சீனாவுக்கு விவசாய பொருள்களுக்கான சந்தை அணுகல், ஊடகம் மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு ஆகிய வற்றிக்கு சீன அரசாங்கத்திடமிருந்து 2,000 கோடி ரூபா வரை உதவி மானியம் கிடைக்க இருக்கின்றது.

சீன ஆதரவுப் போக்குக் கொண்ட இடதுசாரி தரப்பு இலங்கையில் முதல் தடவையாக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி இருக்கும் சூழலில், சீனாவுக்கும் இலங்கையின் புதிய அரசுக்கும் இடையில் மிக நெருக்கம் இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. இதுவரை காலமும் சீனாவுக்கும், மிக அயல் தேசமான இந்தியாவுக்கு இடையில் ராஜதந்திர சம அணுகலை முன்னெடுத்து வந்த கொழும்பு அரச நிர்வாகம், புதிய ஆட்சிப் பீடத்தின் வருகையை அடுத்து சீனா பக்கம் அதிகம் சாயும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆயினும் ஆரம்பத்தில் இருந்தே சீனா மற்றும் இந்தியா ஆகிய இரு தரப்புகளையும் சம தூரத்தில் வைத்திருக்கும் கொழும்பு அரசின் இதுவரையான ராஜதந்திரத்தை அநுர குமாரவின் புதிய அரசும் தொடரும் போக்கையே வெளிக்காட்டி வந்தது.

எனினும், இப்போது தமது முதல் வெளிநாட்டு உத்தியோகபூர்வ விஜயத்தை இந்தியாவுக்கு மேற்கொண்ட இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, அதனை அடுத்து முன்னைய தலைமைகள் மாதிரி சீனாவுக்கு விஜயம் செய்திருக்கின்றார்.

அந்த விஷயத்தை அடுத்து இலங்கைக்கு உதவ சீனா காட்டியிருக்கும் அதீத நட்புறவுச் செய்தி, சீனாவுடன் கொழும்பை மிக நெருக்கமாக அணுக வைக்கும் கட்டாயத்தை ஏற்படுத்தும் என அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

பொருளாதாரத்தில் நொடித்துப் போயிருக்கும் நாட்டை பொறுப்பேற்றிருக்கும் அநுர குமார திஸநாயக்கவுக்கு, பொருளாதார ரீதியில் உத்வேகத்தை அளிக்கும் விதத்தில் சீன காட்டும் அரசியல் பிரதிபலிப்புகள், நிச்சயமாக அவரை இந்தியாவிலிருந்து சற்று விலகி, சீனாவை நோக்கி நகர்த்தும் என்றே அவதானிகள் கருதுகின்றனர்.

இலங்கை ஜனாதிபதியின் சீன விஜயத்தை அடுத்து இலங்கைக்கு உதவும் சீனாவின் திட்டங்கள் பற்றி வெளியாகும் செய்திகள், அத்தகைய நகர்வை நோக்கி கொழும்பை நகர்த்திச் செல்லும் என்ற செய்தியைத்தான் நமக்குத் தந்து நிற்கின்றன.



# 'யாழ்ப்பாணம்' என்ற சொல் யாருக்குக் கசக்கிறது?

## இந்தியாவிற்கா ஜே.வி.பிக்கா அநுரா அரசுக்கா?

- புவியரசன் -

யாழ்ப்பாணம் காலாசார மண்டபத்தின் பெயரை சத்தம் சந்தடியின்றி – இரகசியமாக – அதிரடியாக – மாற்ற வேண்டிய அவசியம் யாது என்ற பெரும் கேள்வி தற்போது முன் வைக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான நிலத்தில் இந்திய அரசின் 100 கோடி ரூபா (இந்திய நாணயம்) அன்பளிப்பில் அமைக்கப்பட்ட கலாசார மண்டபம் ஏற்கனவே சொப்பன சுந்தரியின் நிலையில் நிற்கின்றது.

அதாவது யாழ்ப்பாணம் மாநகர சபையிடம் கையளிக்கப்படும் என அமைக்கப்பட்ட கலாசார மண்டபத்தினை தம்வசப்படுத்த இலங்கை மத்திய காலாசார அமைச்சு தீவிர முயற்சி மேற்கொண்டு வந்தமை மட்டுமல்ல தற்போதும் முயற்சிக்கின்றது.

இந்த நிலையில் 13 அடுக்கு தொடர்மாடிக் கட்டடத்தை பராமரிப்பிற்கு பெரும் ஆளணியும் அவர்களின் சம்பளத்திற்கே மாதாந்தம் 50 லட்சம் ரூபாவும் தேவைப்படும் எனக் கணக்கிட்டபோது அது யாழ்ப்பாணம் மாநகர சபையைப் பொறுத்த மட்டில் வெள்ளை யானையைக் கட்டி தீனி போடுவதற்கு ஒப்பானது, அந்தளவு நிதி வல்லமை கிடையாது எனக் கூறப்பட்டது. அதனால் மீண்டும் இந்தியாவின் உதவி நாடப்பட்டது. அதனை அடுத்து முதல் ஐந்து ஆண்டுகளிற்கான செலவினத்தைப் பொறுப்பேற்கவும் இந்தியா இணங்கியது.

இதற்கமைய 2014-06-09 அன்று கொழும்பில் இந்தியா சார்பில் இந்தியத் தூதுவர் வை.கே. சிங்காவும் இலங்கையின் சார்பில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளரான வை.டி.நிஹால் ஜயதிலகவும் ஒப்பமிட்டு, ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முன்னெடுக்கப்பட்டன். இதற்காக 2016ஆம் ஆண்டு கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கும்போது மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் ஒப்பமிட்டு நிலத்தை வழங்க யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் கொன்சிலர் ஜெனரல் நட்ராஜன் ஒப்பமிட்டு நிலத்தை பெற்றுன் கட்டட ஒப்பந்த நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டு, கட்டுமானம் இடம்பெற்று, 2020 இல் பணிகள் நிறைவுற்றன.

2020 கொரோனாத் தாக்கம் காரணமாக நாடே முடங்கிய போது இதன் திறப்பு விழா, கட்டடக் கையளிப்பு தாமதமடைந்தபோது இக் கட்டடம் அனைவரின் கண்ணை உறுத்தியமையால் இதனை எவ்வாறேனும் மத்திய கலாச்சார அமைச்சின் கீழ் இழுக்க 2020 இல் வந்த கோட்டா அரசு முயன்றது. அப்போது இருந்த பௌத்த சாசன அமைச்சர் கடுமையாக முயன்றார். இக் காலத்தில் மக்களால் தேர்வு செய்த மாநகர சபையும் இயங்கிய போது அனைவரும் முடிந்தவரை அதனைத் தடுத்தனர்.

இக் காலத்திலேயே கலாசார மண்டபம் உத்தியோக பூர்வமாக திறப்பதற்கான அனைத்து ஏற்பாட்டையும் மத்திய கலாசார

தொடர்ச்சி▼

# ‘யாழ்ப்பாணம்’ என்ற சொல் யாருக்குக் கசக்கிறது?

தொடர்ச்சி▲

அமைச்சு இரகசியமாக மேற்கொண்டதோடு அங்கே நாட்டப்படவிருந்த கல்வெட்டில் மாநகர சபை முழுமையாக புறக்கணிக்கப்படுவதான தகவலும் வெளியானதால் அப்போது யாழில் உள்ள இந்தியத் தூதரகத்தின் கொன்சிலர் ஜெனராலாக இருந்த




ராகேச்க் நட்ராஜை மாநகர முதல்வர் நாடினார்.

“நாம் (இந்தியா) அரசிற்கு அரசுடனேயான அடிப்படையிலேயே இது தொடர்பில் பணியை முன்னெடுத்தோம். இருப்பினும் அது யாழ் மாநகரசபைக்கு சொந்தமான நிலத்தில் என்பதில் எம்மிடம் மறுப்பு இல்லை. அதில் மாநகரசபையின் இருப்பை உறுதி செய்ய நீங்கள் கோரும் விடயம் உடன் கொழும்பிற்கு அறிவிக்கப்படும்” – எனத் தெரிவித்த மறுநாள், எந்தவித முன் அறிவிப்பும் இன்றி இரகசியமாக பௌத்த சாசன அமைச்சர் யாழ் கலாசார மண்டபத்திற்கு வருகை தந்து அப்பணியை மேற்கொள்ள முயன்ற போது மாநகர முதல்வர் பெரும் தரக்கத்தில் ஈடுபட்டு விடயம் பல இடம் வரை கொண்டு செல்லப்பட்டது. பின்பு மாநகர முதல்வரின் பெயர் உள் அடங்கிய கல்வெட்டு தயார் செய்யப்பட்டு நாட்டப்பட்டது. முன்பே மாநகர சபை புறக்கணிக்கும் நிலையே காணப்பட்டது.

இதன்போது யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தை செய்மதி இணைப்பு மூலம் பாரதப் பிரதமர் நரேந்திரமோடியே திறந்து வைத்தார்.

அன்று முதல் 2025-01-18 வரை “யாழ்ப்பாணம் கலாசார நிலையம்“ எனப் பெயர் கொண்டிருந்த மண்டபம் திடீரென யாருக்கும் தெரியாமல் “திருவள்ளுவர் கலாச்சார மையம்“ என சிங்களத்திற்கு முதன்மை கொடுத்து பெயர் மாற்றும் நிகழ்வு இடம்பெற்றது என்பது எவருக்குமே புரியாத புதிராகவே உள்ளது.

யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தை மாநகர சபையிடம கையளிக்கக்கோரி கொழும்பில் பல சுற்றுப் பேச்சுக்கள் கடந்த அரசில் முன்னெடுக்கப்பட்ட போதெல்லாம் அதற்கு இடமளிக்காமல் ஏமாற்றிவந்த இலங்கை மத்திய அரசு, இறுதியில் அதனை நிர்வகிக்கவென ஒரு குழுவை முன்வைத்தது.

அதில் இந்தியத் தூதுவர், யாழ்ப்பாணம் மாநகர முதல்வர், கலாச்சார அமைச்சின் செயலாளர் ஆகியோரை நியமித்த சமயம் அப்போதைய ஆளுநர் தன்னையும் அதில் இணைக்குமாறு கோரிக்கை விடுக்க பின்னர் ஆளுநரும் இணைக்கப்பட்டார்.

நியமிக்கப்பட்ட குழுவின் பொறுப்பில் ஒரு வங்கி கணக்கு ஆரம்பிக்கப்பட்டது. இந்தியா 5 வருடங்கள் இதனைப் பராமரிப்பதற்கென வழங்க இணங்கிய நிதியும் இந்தக் கணக்கிற்கே கையளிக்கப்படும் எனவும் தெரிவித்த நிலையில், தற்போது வரையில் கலாசார மண்டபத்தில் இடம்பெறும் நிகழ்விற்கான பணம் அந்த கணக்கிற்கே செல்கின்றது.




“எப்பிடி இருந்த நான் இன்று இப்பிடி ஆயிட்டேனே...!“

இவ்வாறான நிலையிலேயே யாழ்ப்பாணம் கலாசார நிலையம் “திருவள்ளுவர் கலாசார மையம்“ என இரகசியமாக பெயர் மாற்றப்பட்டிருக்கின்றது.

மண்டபத்திற்குரிய மாதாந்த மின்சாரக் கட்டணம் சுமார் 5 லட்சம் ரூபாவைத் தொடுகின்றது. அந்தப் பணத்தை யாழ்ப்பாணம் மாநகர சபையே செலுத்துகின்றது.

இவ்வாறான வரலாற்றைக் கொண்ட கலாச்சார மண்டபத்தில் “யாழ்ப்பாணம்” என்னும் சொல் ஆளும் அநுர அரசிற்கு வேப்பெண்ணையா அல்லது இந்தியாவிற்கு வேப்பெண்ணையா என்பதே யாழ்ப்பாண மக்களின் கேள்வியாக உள்ளது. இந்தக் கேள்விக்கு பதிலளிப்பவர் யார்?

# உன்னிச்சைக் குளத்தின் வான்கதவுகள் திறப்பு மட்டக்களப்பில் வேளாண்மை பெரிதும் பாதிப்பு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் சனிக்கிழமை தொடக்கம் தொடர்ந்து பெய்துவரும் கனமழை காரணமாக மாவட்டதிலுள்ள குளங்கள் அனைத்தும் நீர் நிரம்பிய நிலையில் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன். உன்னிச்சைக் குளத்தின் மூன்று வான் கதவுகள் 6 அடிக்கு திறக்கப்பட்டமையை அடுத்து அந்தப் பகுதியிலுள்ளவேளாண்மைகள்யாவும்வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. தாழ் நிலப் பகுதிகளிலுள்ள குடியிருப்புக்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தொடர் மழையினால் மாவட்டதிலுள்ள நவகிரிகளம், புனாணைஅணைக்கட்டு, வடமுனைகுளம், வெலியாகண்டிய குளம், றூகம்குளம். வாகனேரி குளம், கட்டுமுறிவுக்குளம் போன்ற குளங்களில் நீர் மட்டம் அதிகரித்ததையடுத்து அந்தந்த குளங்களின் நிலைமைக்கு ஏற்றவாறு வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

அதேவேளை உன்னிச்சைக் குளத்தின் நீர் மட்டம் 34 அடிக்கு உயர்ந்ததையடுத்து குளத்தின் 3 வான் கதவுகள் தலா 6 அடி உயரத்துக்கு மூன்று வான்கதவுள் திறக்கப்பட்டுள்ளமையுடன் தொடர்ந்து மழை பெய்து குளத்தின் வான்கதவுகள் மேலும் அதிகளவில் திறக்க வேண்டிய நிலை ஏற்படும் என அதன் நீர்பாசன திணைக்கள பொறியிலாளர் தெரிவித்தார்

இதேவேளை இந்த உன்னிச்சை வான் கதவு திறக்கப்பட்டமைதயடுத்து வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கி வேளாண்மை யாவும் பாதிப்படைந்துள்ளன. தாழ் நிலப்பகுதிகள் நேற்று இரவு வெள்ளத்தில் மூழ்கும் அபாய நிலை காணப்பட்டது. வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையால் ஆற்றை அண்டிய மற்றும் தாழ்நிலபகுதிகளிலுள்ள மக்களை அவதானமாக இருக்குமாறும், நீர் மட்டம் அதிகரித்தால் தாழ்நில பகுதிகளில் உள்ளவர்கள் அங்கிருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் கோரப்பட்டுள்ளது.

குளங்கள், நீர் நிலைகள், கடல், ஆறுகளில் நீராடுவதை தவிர்க்குமாறும், மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் அவதானமாகச் செயற்படுமாறு மாவட்ட இடர் அனர்த்த முகாமைத்துவம் கேட்டுக் கொண்டுள்ளது.







# அம்பாறை மாவட்டத்திலும் பெரும் வெள்ளம்






(எம்.ஏ.றமீஸ்)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் அடைமழை காரணமாக இம்மாவட்டத்தின் டி.எஸ்.சேனநாயக்க சமுத்திரத்தின் ஐந்து வான்கதவுகள் திறக்கப்பட்டு மேலதிக நீர் வெளியேற்றப்பட்டுக் கொண்டிருப்பதால் இம் மாவட்டத்தில் தாழ்நிலப் பிரதேசங்களில் உள்ள மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப் பணிப்பாளர் எம்.ஏ.சி. முகம்மட் றியாஸ் தெரிவித்தார்.

இம்மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் அடைமழை காரணமாக தாழ்நிலப் பகுதிகள் முற்றாக மூழ்கியுள்ளன. கன மழை காரணமாக அம்பாறை - கண்டி பிரதான போக்குவரத்துப் பாதை மூடப்பட்டுள்ளதால் அம்பாறை மாவட்டத்தில் இருந்து கண்டி நோக்கி பயணிக்கும் பயணிகள் வேறு போக்குவரத்து பாதையைப் பயன்படுத்துமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர் எனவும் பிரதிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை களியோடை ஆற்றுப் பகுதியினை அண்டியுள்ள தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பயின்றுவரும்சுமார்10ஆயிரம்மாணவர்களையும் வெள்ள நிலைமையிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு அங்குள்ள விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களை பாதுகாப்பான பகுதிகளில் தங்க வைப்பதற்கான வேலைத்திட்டத்தை மேற்கொள்ளுமாறு பல்கலைக்கழக நிருவாகத்தினரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதிப் பணிப்பாளர் றியாஸ் தெரிவித்தார்.

கடந்த 24 மணி நேரத்தில் அம்பாறை மாவட்டத்தின் எக்கல்ஓயா பகுதியில் 123.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி அதிகப்படியாக பதிவாகியுள்ளது. இங்கினியாகலை பிரதேசத்தில் 120.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், அம்பாறை நகரப் பகுதியில் 103.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், பன்னலகம பகுதியில் 100.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பொத்துவில் பிரதேசத்தில் 71.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளன என வளிமண்டலவியல் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட வானிலை அவதான நிலையத்தின் மூலமாக தெரிவிக்கப்படுகின்றது.

பலத்த மழையினால் அம்பாறை நகரில் ஹாடி தொழில்நுட்பவியல் கல்லூரிப் பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ள சுதுவெல்ல பகுதியில் உள்ள நீர் நிலை முழுமையாக நிரப்பியுள்ளது. அதனால் இப்பிரதேசத்திற்குச் செல்கின்ற மக்களும் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுதவிர, ஒலுவில் அஷ்ரஃப் நகரப் பிரதான பாதை சிதைவடைந்துள்ளதனால் இப்பகுதி மக்களும் பாதுகாப்பாக செயற்படுமாறு வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.

டி.எஸ்.சேனநாயக்க சமுத்திரத்தின் மூலமாக வெளியேற்றப்படும் மேலதிக நீர் கல்லோயா ஆற்றின் மூலம் பிரதானமாகச் செல்வதனால் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களான அம்பாறை, தமண, மகாஓயா, உகன, சம்மாந்துறை, காரைதீவு, சாய்ந்தமருது, நற்பிட்டிமுனை, நாவிதன்வெளி, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, இறக்காமம், திருக்கோவில், பொத்துவில் உள்ளிட்ட பிரதேசங்களில் தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கின்ற மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு மதஸ்தலங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் மூலமும் ஒலிபெருக்கி வாயிலாக அறிவுறுத்தப்படுகின்றது.

அதிக மழை வீழ்ச்சி காரணமாக இம்மாவட்டத்தில் செய்கை பண்ணப்பட்ட ஆயிரக்கணக்கான விவசாயச் செய்கைகள் பாதிப்படைந்துள்ளன. அறுவடைக்குத் தயாராக இருந்த வயல்களில் மிகுந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, கடற்றொழிலில் ஈடுபட்டு வருபவர்கள் தமது மீன்பிடிப் படகுகள், வள்ளங்கள் போன்றவற்றை கடற்கரையிலிருந்து அப்புறப்படுத்தி கரையொதுக்கி வைத்துள்ளனர். கடல் அலைகளின் வீரியம் இம்மாவட்டத்தில் அதிகரித்து காணப்படுகின்றது. கடல் அலை சுமார் 15 அடிக்கு மேல் எழுவதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தின் சில பிரதேசங்களில் முதலைகள், பாம்புகள், நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் விசஜந்துக்கள் போன்றவற்றின் நடமாட்டம் அதிகமுள்ளதனால் பொது மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறும், வெள்ள நிலைமையைப் பார்ப்பதற்காகச் செல்வதையும், நீர் பகுதிகளில் தேவையற்ற வகையில் நடமாடுவது மற்றும் நீராடுவதையும் தவிர்ப்பதோடு, கொதித்தாறிய நீரைப் பருகுமாறும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.முகம்மட் றியாஸ் மேலும் தெரிவித்தார்.



# இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மேலும் இருவர் யாழ் நகைக் கடையில் பண அபகரிப்பு தொடர்பில் கைது

யாழ்ப்பாணத்தில் உள்ள நகைக் கடைக்குச் சென்று நூதனமான முறையில் பணத்தை அபகரித்த சம்பவத்தில் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் இதுவரை ஆறு பேர் கைது செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காளிங்க ஜெயசிங்கவின் வழிகாட்டலுக்கமைய யாழ்ப்பாண குற்றவிசாரணை பொலிஸ் பொறுப்பதிகாரி கலும் பண்டாரா தலைமையிலான குழுவினர் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

பிரதான சூத்திரதாரி சுன்னாகம் பகுதியில் நேற்று முன்தினம் ஐந்து லட்சம் ரூபா பணத்துடன் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை தொடர்ந்து இந்தச் செயலுக்கு உடந்தையாக இருந்த வான் சாரதி உள்ளிட்ட மூவர் கண்டியில் கைது செய்யப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் இராணுவப் புலனாய்வொ பிரிவைச் சேர்ந்த இருவருக்கும் தொடர்பு இருப்பது தெரியவந்த நிலையில், கொழும்பில் வைத்து இருவரும் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர்.

அண்மையில் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள நகைக் கடையொன்றுக்குச் சென்ற குழுவொன்று பொலிஸ் புலனாய்வு பிரிவு (ரிஐடி) எனத் தெரிவித்து 30 லட்சம் ரூபா பணத்தை பறித்துச் சென்ற சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாகச் செய்யப்பட்ட முறைப்பாட்டை தொடர்ந்து கண்காணிப்பு கமராக்களின் உதவியுடன் குற்றவாளிகளைக் கைது செய்யும் நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

விசாரணைகளுக்கு பின்னர் சந்தேக நபர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.




# வில்பத்து பூங்காவிற்குச் செல்ல மறு அறிவித்தல் வரையில் தடை

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

கனமழையால் கலா ஓயா நிரம்பி வழியும் சூழலில் வில்பத்து தேசிய பூங்காவின் எளுவன்குளம் நுழைவு வாயில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு மறு அறிவிப்பு வரும் வரை மூடப்பட்டுள்ளது.

ராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதன் மூலம், கலா ஓயா வழியாகப் பாயும் சுமார் 6,000 கன அடி நீர் வில்பத்து தேசிய பூங்காவிற்குச் செல்லும் எளுவன்குளம்-கலா ஓயா பாலம் வழியாகப் பாய்ந்து, அந்தப் பகுதியை முற்றிலுமாக வெள்ளத்தில் மூழ்கடித்துள்ளது.

அதன்படி, வில்பத்து தேசிய பூங்காவின் எளுவன்குளம் நுழைவு வாயிலுக்குப் பொறுப்பான வனவிலங்குப் பிரிவு, மறு அறிவிப்பு வரும் வரை சுற்றுலாப் பயணிகள் பார்வையிட முடியாது எனத் தெரிவித்துள்ளது.

# குளிர் பானத்தில் மயக்க மருந்து கலந்து கொடுத்து கன்ரர் சாரதியின் ஐந்து பவுண் மோதிரங்கள் சூறை



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் இருந்து வாடகைக்கு அமர்த்திச் சென்ற கன்ரரின் சாரதிக்கு குளிர்பானத்தில் மயக்க மருந்து கலந்து கொடுத்து, அவரின் 5 பவுண் மோதிரங்கள் சூறையாடப் பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் செம்மா தெருப் பகுதியைச் சேர்ந்த இருவர் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் இருந்து கன்ரர் வாகனம் ஒன்றை கிளிநொச்சிக்குச் சென்று பொருள்கள் ஏற்றி வரவேண்டும் எனத் தெரிவித்து வாடகைக்கு அமர்த்தி அழைத்துச் சென்றுள்ளனர்.

இவ்வாறு செம்மா தெருவில் இருந்து சென்றவர்கள் இடைவழியில் வாகனச் சாரதிக்கு குடிப்பதற்கு குளிர்பானம் வாங்கிக் கொடுத்துள்ளனர். இதனையருந்திய சாரதி பரந்தன் சந்திக்கு அருகில் மயக்கமுற்ற போது, சாரதி அணிந்திருந்த தங்க மோதிரங்களை கழற்றிம் கொண்டு மோசடிக்காரர்கள் இருவரும் தப்பிச் சென்றுள்ளனர்.

மயக்கமுற்ற சாரதியுடன் வாகனம் நீண்ட நேரமாக வீதியில் நின்றதனை அவதானித்தவர்கள் சாரதியை மீட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

# யாழ். கலாசார மத்திய நிலையத்தின் பெயர் மாற்றத்தை வரவேற்றார் மோடி


யாழ். கலாசார மத்திய நிலையத்திற்கு “திருவள்ளுவர் கலாசார மையம்” என பெயர் சூட்டப்பட்டதை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வரவேற்றுள்ளார்.

இந்திய அரசின் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட யாழ்.கலாசார நிலையத்திற்கு நேற்று முன்தினம் “திருவள்ளுவர் கலாசார மையம்” என பெயர் சூட்டப்பட்டது.

இந்திய உதவியின் கீழ் யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்பட்ட தனிச்சிறப்பு மிக்க சின்னமாக திகழும் கலாசார நிலையத்திற்கு திருவள்ளுவர் கலாசார மையம் எனப் பெயர் சூட்டப்பட்டதை வரவேற்பதாக பிரதமர் நரேந்திர மோடி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இதன்மூலம் திருவள்ளுவருக்கு மரியாதை செலுத்தப்படுவதோடு இந்திய – இலங்கை மக்களிடையிலான கலாசார, மொழி, வரலாற்று, மற்றும் நாகரிக பிணைப்புகளுக்கான சான்றாகவும் இது திகழ்வதாக இந்திய பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் உள்ள கலாசார நிலையத்திற்கு தெய்வப் புலவரான திருவள்ளுவரின் பெயர் சூட்டப்பட்டமை தொடர்பில் பெருமகிழ்வடைதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர், கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.




இந்திய – இலங்கை உறவுக்கு சான்றாக அமைந்துள்ள கலாசார மையமானது இந்திய உதவியின் கீழ் முன்னெடுக்கப்பட்ட முக்கியமான ஒரு அபிவிருத்தி திட்டமாகும் என இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

யாழ். கலாசார மையம், திருவள்ளுவர் கலாசார மையமாக பெயர் மாற்றப்பட்டமை தமிழின் பெருமையை பரப்புவதற்கான பிரதமர் மோடியின் மற்றுமொரு மைல்கல் என தமிழக ஆளுநர் ஆர். என். ரவி தெரிவித்துள்ளார்.

இதுஇந்தியா–இலங்கைஇடையிலான பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் தொன்மையான கலாசாரம் மற்றும் நாகரிக தொடர்பையும் அடிக்கோடிட்டுக் காட்டுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



# மகா கும்பமேளாவில் தீ விபத்து; உத்தரப்பிரதேசத்தில் பரபரப்பு!

உத்தரப் பிரதேசம் மாநிலம் பிரயக்ராஜில் நடந்து வரும் மகா கும்பமேளா பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை எரிவாயு சிலிண்டர்கள் வெடித்து பெரும் தீ விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். என்றாலும் உயிரிழப்பு குறித்து உடனடி தகவல் ஏதுவும் வெளியாகவில்லை.

இதுகுறித்து அகரா பொலிஸ் நிலைய ஆய்வாளர் பாஸ்கர் மிஸ்ரா கூறுகையில், "மகா கும்பமேளாவின் செக்டார் 19 இல் இரண்டு எரிவாயு சிலிண்டர்கள் வெடித்ததில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது. தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கப் போராடி வருகின்றனர்." என்றார்.

மகா கும்பமேளா 2025 இன் அதிகாரப்பூர்வ எக்ஸ் பக்கத்தில், "மகா கும்பமேளாவில் ஏற்பட்ட பெரும் தீ விபத்து மிகவும் வருத்தத்தைத் தருகிறது. கும்பமேளா நிர்வாகம் உடனடியாக மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை உறுதி செய்து வருகிறது. அனைவரது பாதுகாப்புக்காகவும் நாங்கள் கங்கை அன்னையை பிரார்த்தனை செய்கிறோம்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாதிக்கப்பட்ட பகுதியில் இருந்து அடர்த்தியான கரும்புகை மேலெழும் வீடியோவையும் பகிர்ந்துள்ளது.

இந்த விபத்து குறித்து ஏடிஎம் மேளா, விவேக் சதுக்வேதி கூறுகையில், "துரதிருஷ்டவசமாக கீதை பத்திரிக்கை முகாமில் இருந்து தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது. 70-80 குடிசைகள், 8 -10 கூடாரங்கள் எரிந்துள்ளதாக தெரிகிறது. உயிரிழப்புகள் எதுவும் இல்லை. அனைவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். தீ அணைக்கப்பட்டுள்ளது." என்றார்.

இதனிடையே விபத்து குறித்து அறிய மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் சம்பவ இடத்துக்கு சென்று பார்வையிட்டுள்ளார்.

# 65 லட்சம் பேருக்கு சொத்துரிமை அட்டைகள்

## பிரதமர் மோடி வழங்கினார்

ஸ்வாமித்வா திட்டத்தின் கீழ் 10 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 50,000 கிராமங்களில் உள்ள சொத்து உரிமையாளர்கள் 65 லட்சத்துக்கு மேற்பட்டோருக்கு சொத்து அட்டைகளை பிரதமர் மோடி காணொலி மூலம் வழங்கியுள்ளார்.

இந்தியாவில் உள்ள பல கிராமங்களில் பாரம்பரியமாக சொத்துக்களை வைத்திருப்பவர்களுக்கு முறையான சட்ட ஆவணங்கள் இல்லை. இதற்காக கிராமங்களில் உள்ள நிலப் பகுதிகளை ட்ரோன்கள் மற்றும் புவிசார் தகவல் அமைப்பு தொழில்நுட்பம் மூலம் வரைபடம் உருவாக்கப்பட்டு உரிமையாளர்களுக்கு சொத்துரிமை அட்டை வழங்கும் திட்டம் (ஸ்வாமித்வா) கடந்த 2020 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

10 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 50,000 கிராமங்களில் உள்ள சொத்து உரிமையாளர்கள் 65 லட்சத்துக்கு மேற்பட்டோருக்கு சொத்துரிமை அட்டைகளை பிரதமர் மோடி காணொலி மூலம் நேற்று வழங்கினார். குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் மோடி காணொலி மூலம் பங்கேற்று உரையாற்றுகையில்,

"நாட்டில் உள்ள கிராமங்கள் மற்றும் கிராம பொருளாதாரத்துக்கு இன்று வரலாற்று சிறப்பு மிக்க நாள். கிராமங்களில் சட்டப்பூர்வமான சொத்து ஆவணம் இல்லாத 65 லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு, ஸ்வாமித்வா திட்டம் மூலம் இன்று சொத்துரிமை அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் இது வரை கிராமங்களில் வசிக்கும் 2.24 கோடி பேர் சொத்து அட்டைகளை பெற்றுள்ளனர். இத்திட்டத்தின் மூலம் பயன் அடைந்தவர்களின் முகத்தில் தன்னம்பிக்கையை பார்க்க முடிகிறது. முறையான சொத்து ஆவணம் இன்றி மக்கள் வசிக்கும் பிரச்சினை பல நாடுகளில் உள்ளது ஐ.நா. ஆய்வில் தெரியவந்தது. இதேபோன்ற சவால்கள் இந்திய கிராமங்களிலும் உள்ளன.

கிராமவாசிகளுக்குச் சொந்தமான சிறிய அளவிலான சொத்துக்கள் பெரும்பாலும் உயிரற்ற மூலதனமாக உள்ளன. இந்த சொத்தை பரிவர்த்தனைகளுக்கு பயன்படுத்த முடியாது. குடும்பத்தின் வருமானத்தை அதிகரிக்கவும் உதவாது. சக்திவாய்ந்த நபர்களால் சட்டவிரோத ஆக்கிரமிப்புக்கு கூட இந்த நிலை வழிவகுத்தது. சொத்துகள் தொடர்பான நீண்டகால தகராறுகளால் தலித், பிற்படுத்தப்பட்டோர், பழங்குடியின குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஸ்வாமித்வா திட்டத்தை அரசு அறிமுகம் செய்தது.

ஸ்வாமித்வா திட்டத்தின் மூலம் துல்லியமான சொத்துரிமை தகவல்களை அரசு தற்போது வழங்கி வருகிறது. இதன் மூலம் நில சம்பந்தமான பிரச்சினைகள் குறைந்துள்ளன. இந்தியாவில் 6 லட்சத்துக்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. அவற்றில் பாதிக்கும் மேற்பட்ட கிராமங்களில் ட்ரோன் கணக்கெடுப்புகள் முடிக்கப்பட்டுள்ளன.

புதுச்சேரி, அந்தமான் நிக்கோபார் தீவுகள், திரிபுரா, கோவா, உத்தராகண்ட், ஹரியானா ஆகியவற்றில் இந்தத் திட்டம் முழு வளர்ச்சியை எட்டியுள்ளது. மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களிலும், பல யூனியன் பிரதேசங்களிலும் ட்ரோன் கணக்கெடுப்பு முடிக்கப்பட்டுள்ளது.

ஸ்வாமித்வா திட்டம் மூலம் பெறப்படும் சொத்து அட்டைகளை வைத்து கிராம மக்கள் வங்கிகளில் கடன் பெற்று, சிறு தொழில்களைத் தொடங்கியுள்ளனர். அனைத்து கிராமங்களிலும் சொத்து அட்டைகள் வழங்கப்பட்டால், 100 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான பொருளாதார நடவடிக்கைகளை அது ஏற்படுத்தும்."- என்றார்.




# 3 மணி நேரம் தாமதமாக அமுலுக்கு வந்தது இஸ்ரேல் - ஹமாஸ் போர் நிறுத்த ஒப்பந்தம்!

பலரும் எதிர்பார்த்த இஸ்ரேல் – ஹமாஸ் போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்துள்ளது.

இதன்மூலம், 15 மாதங்களாக நடைபெற்ற போர் முடிவுக்கு வந்துள்ளது.

நிபந்தனைகள் இருந்தாலும் இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தம் பல தரப்பிலும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

முன்னதாக இஸ்ரேல் நேரப்படி நேற்று காலை 8.15 இற்கு அமுலுக்கு வர வேண்டிய போர் நிறுத்தம் சில மணி நேரம் தாமதமானது.

எவ்வாறாயினும் நேற்று முதல் போர் நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ளது.

இதேநேரம் போர் நிறுத்தத்தின் பின்னர் காசாவில் தாக்குதல்கள் இடம்பெற்றன என கூறப்படுகிறது.

ஹமாஸால் விடுவிக்கப்பட வேண்டிய பணயக் கைதிகளின் பெயர் பட்டியலை அவர்கள் வெளியிடாததால், போர் நிறுத்த ஒப்பந்த அமுலை நிறுத்தி வைத்துள்ளதாக இஸ்ரேல் தெரிவித்திருந்தது.

தொடர்ந்து தாக்குதல் நடத்துவதாகவும் கூறியிருந்தது. இதனால் பதற்றநிலை ஏற்பட்டது.

இந்நிலையில், விடுவிக்கத் தயாராக உள்ள மூன்று பெண் பணயக் கைதிகளின் பெயர்களை ஹமாஸ் வெளிட்டதைத் தொடர்ந்து காசா போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்துளளது.

மூன்று மணி நேர தாமதத்துக்குப் பின்பு இந்த போர் நிறுத்தம் உள்ளூர் நேரப்படி முற்பகல் 11.15 இற்கு அமுலுக்கு வந்தது.

# 2025ஆம் ஆண்டு ஆஸ்கார் விருதுகள் நிகழ்வுக்கான திகதி ஒத்திவைப்பு

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சலிஸில் பரவிவரும் காட்டுத்தீ காரணமாக, 2025 ஆம் ஆண்டு ஆஸ்கார் விருதுகள் விழா நடத்தப்படுமா இல்லையா என்பது குறித்து மேலும் நிச்சயமற்ற தன்மை நிலவுவதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

விருது வழங்கும் விழாவை ரத்து செய்யுமாறு பலர் கோரிக்கை விடுத்துள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

வேட்புமனு அறிவிப்பு நேற்று வெளியிடத் திட்டமிடப்பட்டிருந்தாலும், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் இந்த நிகழ்வை ஜனவரி 23 ஆம் திகதி வரை ஒத்திவைத்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இதுபோன்ற சூழலில் 2025 ஆம் ஆண்டுக்கான ஆஸ்கார் விருதுகள் ரத்து செய்யப்படலாம் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



இதேவேளை 97 ஆவது அகாடமி விருதுகள் அல்லது ஆஸ்கார் விருதுகள் மார்ச் 2 ஆம் திகதி நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 20.01.2025




தேவையற்ற மனக் கவலைகள் இன்று உங்கள் வளர்ச்சிக்கு தடையாக இருக்கும். அத்தகைய உணர்வுகள் ஏற்படாமல் சமாளிப்பதன் மூலம் நீங்கள் நற்பலன் பெற முடியும்.

இன்று பணியில் தவறுகள் செய்ய நேரிடலாம். கவனத்துடன் இருந்தால் சிறப்பாக செயலாற்ற முடியும்.

கணவன் மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு காரணமாக உறவில் சலசலப்பு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இல்லை. பணத்தை இழக்கும் வாய்ப்பிருப்பதால் பணத்தை கவனமாகக் கையாளவும்.

இன்று உங்களுக்கு தொண்டையில் வலி ஏற்படலாம். குளிர்மையான பொருள்கள் உண்பதை தவிர்க்கவும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இல்லை. அனுசரித்துப் போவதன் மூலம் நன்மை பெறலாம். தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். கூடுதல் பணிகள் காரனமாக நேரமும் உழைப்பும் அதிகம் தேவைப்படும். அதனால் கவலைகள் ஏற்படலாம்.

உறவில் சுமுகமான நிலை இருக்காது. மனம் திறந்து பேசி புரிய வைப்பதன் மூலம் கருத்து வேறுபாடுகளை தவிர்க்கலாம்.

இன்று பணவரவு இல்லை. பணத்தட்டுப்பாடு காரணமாக கவலைகள் ஏற்படும். கண்களில் எரிச்சல் ஏற்படலாம். தகுந்த மருத்துவம் நன்மை அளிக்கும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக உள்ளது. உங்கள் செயல்களில் வெற்றி பெறுவதற்கான வலிமையும் ஊக்கமும் இன்று காண்பீர்கள். மொத்தத்தில் இன்றைய நாள் உங்களுக்கு செழிப்பைத் தரும்.

இன்று பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்தி நல்ல பெயரும் வெற்றியும் பெறுவீர்கள்.

இன்று நீங்கள் அமைதியாகவும் பக்குவமாகவும் பேசி செயல்படுவீர்கள். அதனால் புரிந்துணர்வு அதிகமாகும்.

நிதிநிலைமை இன்று சாதகமாக உள்ளது. உங்கள் கடின உழைப்பிற்காக சலுகையும் ஊக்கத்தொகையும் பெறுவீர்கள்.

இன்று உங்கள் மனம் உற்சாகத்துடன் இருக்கும். எனவே ஆரோக்கியத்தில் எந்த குறைபாடும் இருக்காது.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாளாக அமையும். பணத்தை பெருக்கும் புதிய வழியைக் காண்பீர்கள். எதிர்பாராத செல்வ ஆதாயங்களை இன்றயை நாள் உங்களுக்கு பெற்றுத் தரும்.

தொழிலில் வெற்றி கிடைக்கும். பணியை விரைந்து முடிப்பீர்கள். பணியில் நல்ல பெயர் எடுப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளது.

கணவன் மனைவிக்குள் அன்யோன்யம் பெருகும். உறவு வலுப்படும். திருப்திகரமாக இருக்கும்.

இன்று பணவரவு தாராளமாக இருக்கும். நண்பர்களிடமிருந்தும் பண உதவி கிடைக்கும்.

இன்று ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வழக்கமான மருத்துவ பரிசோதனை செய்துகொள்வது நல்லது.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இல்லை. எந்தவொரு செயலிலும் தெளிவாக சிந்தித்து முடிவெடுங்கள். மற்றவர்களுடன் பேசும் போது வார்த்தைகளை கவனமாக தேர்ந்தெடுத்து பேச வேண்டும்.

இன்று திறமையாக செயலாற்றுவதில் தடைகளும் ஏமாற்றங்களும் காணப்படும். இன்று சக பணியாளர்களுடன் நல்லுறவு பேண முடியாது.

கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடு ஏற்படலாம். நல்லுறவைப் பேண அனுசரித்து அமைதியுடன் பேசவும்.

இன்று எதிர்பாராத பண விரயங்கள் ஏற்படலாம். தேவையற்ற செலவுகள் ஏற்படலாம். எனவே செலவுகளை கட்டுப்படுத்துங்கள்.

அதிக வேலை காரணமாக சோர்ந்து போவீர்கள்.




நீங்கள் எதிர்பார்த்த பலன்கள் இன்று கிட்டாது. உங்கள் தினசரி செயல்களில் கூட இன்று மாற்றங்கள் செய்து கொண்டே இருக்க வேண்டியிருக்கும். நம்பிக்கை இழக்க நேரிடலாம். தன்னம்பிக்கையுடன் போராடுங்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். சகபணியாளர்களிடம் கவனமாக நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பொறுமை இழந்து காணப்படுவீர்கள். உங்கள் துணையைப் புரிந்து கொண்டு பொறுமையுடன நடந்து கொள்ளுங்கள்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இல்லை. நிலைமயை சமாளிப்பதில் சிரமம் ஏற்படும்.

இன்று கண்களில் எரிச்சல் ஏற்படலாம். தகுந்த மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளுங்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக உள்ளது. இன்று முன்னேற்றத்திற்கான வழிமுறைகளும் நீங்கள் எதிர்பார்த்த வெற்றியும் கிட்டும். உங்கள் எண்ணங்கள் ஈடேறும்.

இன்று உங்கள் திறமைக்காக மேலதிகாரியின் பாராட்டைப்பெறுவீர்கள். உங்கள் பணியின் மூலம் உங்கள் மேலதிகாரிக்கு பெருமை ஏற்டுத்தித் தருவீர்கள்.

கணவன் மனைவிக்குள் சுமுகமான உறவு இருக்கும். உங்கள் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு பயனுள்ள முடிவை எடுப்பீர்கள்.

இன்றைய பண வரவு திருப்திகரமாக இருக்கும். இன்று உபயோகமான வழிகளில் பணத்தை செலவிடுவீர்கள்.

உங்கள் உற்சாகமான மனநிலையின் காரணமாக இன்று நாள் முழுவதும் ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும்.




இன்று முன்னேற்றமான நாளாக இருக்கும். இன்று தடைகளைத்தாண்டி முன்னேறி சாதனை படைப்பீர்கள்.

இன்று நீங்கள் பலனை எதிர்பார்க்காமல் கடமையைச் செய்வீர்கள். உங்களது இந்த மனப்பான்மை காரணமாக பணியை விரைந்து முடித்து உங்கள் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையாருடன் உண்மையான அன்புடன் நடந்து கொள்வீர்கள். அதனால் உறவு வலுப்படும்.

இன்று பணவரவு அதிகமாக இருக்கும். உங்கள் வங்கி இருப்பபு நிலை நல்ல முறையில் இருக்கும்.

இன்று நல்ல உற்சாகத்துடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 20.01.2025




இன்று பொறுமையுடன் நடந்து கொள்ள வேண்டும். எதற்கும் உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். யோகா அல்லது தியானம் செய்யுங்கள்.

இன்று பணிகளை விரைந்து முடிப்பதில் சற்று சிரமம் இருக்கும். அதிக வேலை காரணமாக வேலையில் தவறுகள் ஏற்படலாம். கவனமாக வேலை செய்ய வேண்டும்.

உங்கள் துணையுடன் சகஜமாக பழகுங்கள். அதனால் உங்களுக்கு திருப்தியும் மகிழ்ச்சியும் கிடைக்கும்.

இன்று நிதிநிலைமை சீராக இருக்காது. நீங்கள் எதிர்பார்த்ததை விட செலவுகள் அதிகமாக இருக்கும். அதனால் கவலைகள் ஏற்படலாம்.

இன்று உங்களுக்கு தலைவலி உபாதைகள் ஏற்படலாம். கடவுளை தியானம் செய்வதன் மூலம் அதன் உபாதையிலிருந்து விடுபடலாம்.




இன்று அமைதியான மற்றும் சந்தோஷமான சூழல் இருக்கும். இன்று நீங்கள் உங்கள் இலக்கை அடைவதற்கு நேர்மறையான எண்ணத்துடன் செயல்படுவீர்கள்.

இன்று பணியின் மூலம் ஆதாயம் கிடைக்கும். நீங்கள் இன்று திறமையாகவும் துல்லியமாகவும் பணியை முடிப்பீர்கள்.

இன்று கணவன் மனைவி நட்புறவுடன் பழகுவீர்கள். அதனால் அன்பும் அன்யோன்யமும் அதிகரிக்கும்.

இன்று பணவரவு காணப்படும். உங்கள்தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் அளவிற்கு நிதிநிலைமை போதுமானதாக இருக்கும்.

இன்று உற்சாகத்துடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.




நீங்கள் எதிர்பாரத்த பலன்கள் இன்று கிடைப்பது அரிது. இன்றைய நாள் உங்களுக்கு குறைந்த அளவே அனுகூலமாக இருக்கும்.

இன்று பணிச் சுமை அதிகமாக இருக்கும். திட்டமிட்டு வேலை செய்யுங்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை மற்றும் நகைச்சுவை உணர்வுடன் பழக வேண்டிய நாள். நட்புடன் பேசினால் நல்லுறவைப் பேணலாம்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இல்லை. கூடுதல் செலவுகள் காரணமாக பணப்பற்றாக்குறை ஏற்படலாம்.

தாயின் உடல்நிலை பற்றிய கவலை இருக்கும். எனினும் சிறிய அளவிலான நோயாகத்தான் இருக்கும்.




இன்று எதிர்மறையான எண்ணங்கள் உங்கள் மனதில் தோன்றலாம். அதைத் தவிர்த்தால் முன்னேற்றம் உண்டாகும். எதையும் யதார்த்தமாக அணுகுங்கள்.

கவனக்குறைவால் வேலையில் தவறுகள் ஏற்டலாம். திட்டமிட்டுத் திறமையுடன் செய்வதன் மூலம் வெற்றி காணலாம்.

அன்பைக் கொடுத்து அன்பை வாங்குவதன் மூலம் சந்தோஷத்தை உருவாக்கிக் கொள்ள முடியும்.

இன்று அதிகரிக்கும் செலவினங்கள் இருக்கும். நீங்கள் ஏற்றுக் கொண்ட அல்லது ஒப்புக் கொண்ட காரியங்களுக்காக பணம் செலவு செய்ய நேரிடலாம். அது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

இன்று முதுகு வலி வர வாய்ப்பு உள்ளது. இறை வழிபாடு அல்லது தியானம் மூலம் ஆரோக்கியத்தை வலுப்படுத்தலாம்.

# நுவரெலியாவில் தொடர் மழை இயல்பு நிலை பெரிதும் பாதிப்பு





மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை முதல் தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக பெருந்தோட்ட தொழிலாளர்கள் மற்றும் பண்ணையாளர்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து மழை பெய்து வருவதால் சிவனடி பாத மலைக்குச் செல்லும் யாத்திரிகர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மலை உச்சியில் இருந்து படிக்கட்டுகளில் மழை நீர் வடிந்து ஓடுவதால் யாத்திரிகர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

வெள்ளி, சனி, ஞாயிறு விடுமுறை என்பதால் அதிக அளவில் யாத்திரிகர்கள் வருகை தந்து மலைக்கு சென்று தரிசனம் செய்தனர். உள்நாட்டு, வெளிநாட்டு யாத்திரிகர்கள் வருகை அதிகரித்துள்ளது.

நீர் தேக்கங்களின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. மவுசாகல, மேல் கொத்மலை, காசல்ரீ, கென்யோன், லக்சபான, பொல்பிட்டிய, நவலக்சபான, கலுகல விமலசுரேந்திர ஆகிய நீர் தேக்கங்களின் நீர் மட்டம் உயர்ந்து செல்வதைக் காண கூடியதாக உள்ளது.

மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் எங்கு பார்த்தாலும் பனி மூட்டமும் காணப் படுகிறது.

குறிப்பாக மஸ்கெலியா நோட்டின், நோட்டன் பிரிட்ஜ், கினிகத்தேன ஏ7 வீதி மற்றும் மஸ்கெலியா ஹட்டன் வீதியில் அதிக அளவில் பனி மூட்டம் காணப்படுகிறது. இதனால் வாகன சாரதிகளை மிகவும் அவதானமாக வாகனங்களைச் செலுத்துமாறு போக்குவரத்துப் பொலிஸார் கேட்டுள் ளனர்.